# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

## வகுப்பு 12

பதிவெண் | | | | | |

**PART - III - வணிகவியல்**

நேரம்: 2.30 மணி  மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு:  **20×1=20**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) மேலாண்மை என்பது ..............ன் செயலாகும்.
அ) மேலாளர்  ஆ) கீழ்பணியாளர்  இ) மேற்பார்வையாளர்  ஈ) உயர் அதிகாரி

2) அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
அ) ஃபோயல்  ஆ) டெய்லர்  இ) மேயோ  ஈ) ஜேக்கப்

3) பின்வருவனவற்றுள் எது முக்கிய செயல்பாடு அல்ல?
அ) முடிவெடுத்தல்  ஆ) திட்டமிடுதல்
இ) ஒழுங்கமைத்தல்  ஈ) பணிக்கமர்த்துதல்

4) .............. உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
அ) முதுகலை வணிக மேலாண்மை  ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) குறி இலக்கு மேலாண்மை  ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

5) மூலதனச்சந்தை என்பது ..............க்கான ஒரு சந்தையாகும்.
அ) குறுகிய காலநிதி  ஆ) நடுத்தரக் காலநிதி
இ) நீண்டகால நிதி  ஈ) ஏதுமில்லை

6) NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990  ஆ) 1992  இ) 1998  ஈ) 1997

7) பணச்சந்தை வழங்குவது
அ) நடுத்தர கால நிதிகள்  ஆ) குறுகிய கால நிதிகள்
இ) நீண்ட கால நிதிகள்  ஈ) பங்குகள்

8) நம் நாட்டில் .............. பங்குச் சந்தைகள் உள்ளன.
அ) 21  ஆ) 24  இ) 20  ஈ) 25

9) இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1988  ஆ) 1992  இ) 1995  ஈ) 1998

10) பெரிய நிறுவனங்களின் தொழில் மூலனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளர்களுக்கு உதவுவது .............. ஆகும்.
அ) பரஸ்பர நிதி  ஆ) பங்குகள்  இ) கடனீட்டுப் பத்திரங்கள்  ஈ) நிலை வைப்புகள்

11) மனிதவளம் என்பது ஒரு .............. சொத்து.
அ) கண்ணுகு புலனாகும்  ஆ) கண்ணுக்கு புலனாகா
இ) நிலையான  ஈ) நடப்பு

12) விளம்பரம் என்பது ஒரு .............. ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள்  ஆ) புற வளங்கள்  இ) முகவர்  ஈ) புறத் திறனீட்டல்

13) தேர்வு பொதுவாக ஒரு .............. செயலாகக் கருதப்படுகிறது.
அ) நேர்மறை  ஆ) எதிர்மறை  இ) இயற்கை  ஈ) இவற்றில் எதுவும் இல்லை

14) தொழிற்சாலைக்குள் பயிற்சி எங்கு வழங்கப்படுகிறது?
அ) வேலையிடத்தில்  ஆ) அறையில்  இ) பயிற்சி திணைக்களத்தில்  ஈ) குழுவினால்

15) பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
அ) விற்பனையாளர்  ஆ) சந்தையிடுகையாளர்  இ) வாடிக்கையாளர்  ஈ) மேலாளர்

16) சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை
அ) முற்றுரிமை முறை  ஆ) பணத்திற்கு மாற்றுதல்
இ) பண்டமாற்று முறை  ஈ) தற்சார்பு உற்பத்தி

17) கீழ்க்கண்டவற்றுள் சந்தைப்படுத்தப்படாத சொத்துகள் எவை?
அ) அரசு பத்திரங்கள் ஆ) பொதுத்துறை நிறுவனங்களின் பிணையங்கள்
இ). தேசிய சேமிப்பு பத்திரங்கள் ஈ) பட்டியலிடப்பட்ட நிறுமத்தின் பங்குகள்

18) தவறான கூற்று எது?
அ) பணிக்கு பொருத்தமான நபர்களை மற்றும் தேர்ந்தெடுப்பது பணிக்கமர்த்தல் ஆகும்.
ஆ) ஒரு மேலாளர் ஒரு நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும்.
இ) செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.,
ஈ) திட்டமிடுதல் இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியும்.

19) கீழே கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக்கூறு ஆ) பொருள்கூறு இ) திட்டக்கூறு ஈ) விலைகூறு

20) தரகர்கள் பங்குச் சந்தையில் ஈடுபடுவது
அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**
**அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) மேலாண்மை என்றால் என்ன?
22) திட்டமிடுதல் என்றால் என்ன?
23) குறியிலக்கு மேலாண்மை என்றால் என்ன?
24) நிதிச்சந்தை - சிறுகுறிப்பு வரைக.
25) OTCEI - குறிப்பு வரைக.
26) அரசுப்பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
27) பங்குச்சந்தை வரைவிலக்கணம் தருக.
28) செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.
29) மனிதவள மேலாண்மை என்றால் என்ன?
30) நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**
**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?
32) இயக்குதலின் முக்கியத்துவம் என்ன?
33) குறி இலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.
34) இரண்டாம் நிலைச்சந்தை - சிறுகுறிப்பு வரைக.
35) மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் யாவை? விளக்கம் தருக.
36) வணிக இரசீதின் வகைகளை விவரி.
37) காளை மற்றும் கரடி விளக்குக.
38) செபி அமைப்பின் கட்டமைப்புகளை வரைக.
39) மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன?
40) மனோபாவச் சோதனை என்றால் என்ன?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது? **(அல்லது)**
சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரிக்கவும்.

42) சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரிக்கவும். **(அல்லது)**
மேலாண்மையின் முக்கிய பணிகளைக் கூறி விளக்குக.

43) குறியிலக்கு மேலாண்மையில் ஈடுபட்டுள்ள செயல்முறைகள் யாவை? **(அல்லது)**
பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

44) நவீன மேலாண்மையின் கோட்பாடுகளை விவரிக்கவும். **(அல்லது)**
பணியமர்த்தல் கொள்கைகளை விளக்குக.

45) ஆட்சேர்ப்பின் பல்வேறு முறைகளை விளக்குக. **(அல்லது)**
நிதிச்சந்தையின் பல்வேறு வகைகளை விவரிக்க.

46) அரசுப் பத்திரங்களின் இயல்புகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக. **(அல்லது)**
செபியின் அதிகாரங்களை விவரிக்கவும்.

47) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. **(அல்லது)**
பங்குச் சந்தையினால் சமுதாயத்திற்கான பயன்களை விவரிக்கவும்.

@@@@@@